DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.35/2025**

**2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 10- ம் நாள் செவ்வாய்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.01 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 01 | தொழில் | - | அரசு பேருந்து ஓட்டுநர் |
| பெயர் | - | ராஜேஸ்பிரபு | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | சாமுவேல் | சமயம் | - | |
| கிராமம் | - | எம்.ஜீ.ஆர் நகர் | வயது | - | 45/2026 |
| சாதி | - | | | | |

**<u>10-03-2026</u>**

**( 1, 2 எதிரிகள் ஆஜர். 3-ம் எதிரி ஆஜரில்லை)**

(3-ம் எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து, வால்பாறையில் அரசு போக்குவரத்து கழகத்தில் பேருந்து ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. கடந்த 09.06.2025-ம் தேதி இரவு 09.00 மணியளவில் இஞ்சிப்பாறையில் பயணிகளை பேருந்தில் இருந்து இறக்கிவிட்டு வால்பாறை அரசு போக்குவரத்து கழகத்திற்கு ஓட்டி வந்தேன். அதில் முருகன் என்பவர் நடத்துனராக பணிபுரிந்திருந்தார். டிப்போவிற்குள் பேருந்தை இறக்கும் இடத்தில் 3 நபர்கள் பைக்கில் வந்து பேருந்து முன்பு குறுக்கே நின்றார்கள். நான் பேருந்தை நிறுத்திவிட்டேன். அவர்கள் அருகில் சென்றபோது, நடத்துனர் பேருந்தில் இருந்து இறங்கி அவர்களிடம் கேட்டார். நான் பேருந்திற்குள் அமர்ந்திருந்தேன். பொதுமக்கள் அங்கு வந்துவிட்டார்கள். அந்த நபர்கள் தகாத வார்த்தைகளால் பேசினார்கள். அங்கு கூட்டம் கூடிவிட்டதாலும, இரவு நேரம் என்பதாலும் அவர்கள் யார் என்று அடையாளம் தெரியவில்லை. பின்னர், நான் வால்பாறை காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையது. அந்த புகார் மனுவை நான் தான் எழுதினேன். **அந்த புகார் மனு அ.சா.ஆ.1-ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

1. கடந்த 09.06.2025-ம் தேதி நான் இரவு 08.45 மணியளவில் அரசு பேருந்தை டிப்போவிற்குள் செலுத்திய போது, ஆஜர் எதிரிகள் மூவரும் ஒரு இருசக்கர வாகனத்தில் வேகமாக வந்து பேருந்து முன் குறுக்காட்டி நிறுத்தினார்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் அப்போது, பேருந்தை நிறுத்திவிட்டு கீழே இறங்கி எதிரிகளிடம் ஏன் இப்படி வேகமாக வந்து நிறுத்துறீங்க என்று கேட்ட போது, எதிரிகள் மூவரும் என்னை பார்த்து தகாத வார்த்தைகளால் திட்டி, சஞ்சய் என்பவர் கையால் எனது வாயில் குத்தினார். கண்ணன் என்பவர் கையால் முதுகில் அடித்தார் என்று சொன்னால் சரியல்ல. சிவசக்தி என்பவர் எனது இடுப்பு பகுதியில் எட்டி உதைத்தார் என்று சொன்னால் சரியல்ல. நான் நிலைதடுமாறி கீழே விழுந்த போது, நடத்துனர் முருகன் எதிரிகளை பார்த்து சத்தம் போடவே சஞ்சய் கீழே கிடந்த கல்லை எடுத்து கொலை மிரட்டல் விடுத்து கல்லை அங்கே கீழே போட்டுவிட்டு எதிரிகள் மூவரும் இருசக்கர வாகனத்தில் சென்றுவிட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. பின்னர் நானும், நடத்துனரும் பேருந்தை பணிமனையில் நிறுத்திவிட்டு கிளை மேலாளரிடம் அனுமதி பெற்று, வால்பாறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றேன் என்று சொன்னால் சரியல்ல. நான் அரசு மருத்துவமனையில் புறநோயாளியாக சிகிச்சை பெற்று வால்பாறை காவல் நிலையம் சென்று புகார் அளித்ததின் பேரில் போலீசார் என்னை விசாரித்தார்கள் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது, எதிரிகளுக்கு பயந்து எதிரிகளுக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பிறழ்சாட்சியாக மாறி சாட்சியமளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:** இல்லை

**மறு விசாரணை** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி.N.மீனாட்சி
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.35/2025**

**2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 10- ம் நாள் செவ்வாய்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 02-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 2 | தொழில் | - | அரசு பேருந்து நடத்துனர் |
| பெயர் | - | முருகன் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | பொன்னுசாமி | சமயம் | - | |
| கிராமம் | - | பச்சமலை எஸ்டேட் | வயது | - | 45/2026 |
| சாதி | - | | | | |

**<u>10-03-2026</u>**

**( 1, 2 எதிரிகள் ஆஜர். 3-ம் எதிரி ஆஜரில்லை)**

(3-ம் எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து, வால்பாறை அரசு போக்குவரத்து கழகத்தில் பேருந்து நடத்துனராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 ராஜேஸ்பிரபு அரசு போக்குவரத்து கழகத்தில் பேருந்து ஓட்டுநர் ஆவார். ஆஜர் எதிரிகளை தெரியாது. கடந்த 09.04.2025-ம் தேதி இரவு 09.00 மணியளவில் இஞ்சிப்பாறையில் இருந்து வால்பாறைக்கு அரசு பேருந்தில் நான் நடத்துனராகவும், அ.சா.1 ஓட்டுநராகவும் பணிமனைக்கு வந்த போது, பேருந்தின் கிளை அருகே சத்தம் கேட்டது. என்ன என்று பார்த்த போது, கூட்டம் கூடிவிட்டது. யாரோ திட்டிக்கொண்டுள்ளார்கள் யார் என்று தெரியவில்லை. போக்குவரத்தை சீர் செய்வதற்காகவும் அந்த நேரத்தில் ஆம்புலன்ஸ் வந்து விட்டதால் பேருந்தை ஓரமாக நிறுத்திவிட்டோம். காவல் நிலையத்தில் தகவல் தெரிவித்து, அ.சா.1 புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

1. கடந்த 09.06.2025-ம் தேதி நான் இரவு 08.45 மணியளவில் அ.சா.1 அரசு பேருந்தை டிப்போவிற்குள் செலுத்திய போது, நான் அந்த பேருந்தில் நடத்துனராக பணியில் இருந்த போது, ஆஜர் எதிரிகள் மூவரும் ஒரு இருசக்கர வாகனத்தில் வேகமாக வந்து பேருந்து முன் குறுக்காட்டி நிறுத்தினார்கள் என்று சொன்னால் சரியல்ல. அ.சா.1 அப்போது, பேருந்தை

நிறுத்திவிட்டு கீழே இறங்கி எதிரிகளிடம் ஏன் இப்படி வேகமாக வந்து நிறுத்துறீங்க என்று கேட்ட போது, எதிரிகள் மூவரும் அ.சா.1-ஐ பார்த்து தகாத வார்த்தைகளால் திட்டி, சஞ்சய் என்பவர் கையால் அ.சா.1-ன் வாயில் குத்தினார். கண்ணன் என்பவர் கையால் அ.சா.1-ன் முதுகில் அடித்தார் என்று சொன்னால் சரியல்ல. சிவசக்தி என்பவர் அ.சா.1-ன் இடுப்பு பகுதியில் எட்டி உதைத்தார் என்று சொன்னால் சரியல்ல. அ.சா.1 நிலைதடுமாறி கீழே விழுந்த போது, நான் எதிரிகளை பார்த்து சத்தம் போடவே சஞ்சய் கீழே கிடந்த கல்லை எடுத்து கொலை மிரட்டல் விடுத்து கல்லை அங்கே கீழே போட்டுவிட்டு எதிரிகள் மூவரும் இருசக்கர வாகனத்தில் சென்றுவிட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. பின்னர் நானும், அ.சா.1-ம் பேருந்தை பணிமனையில் நிறுத்திவிட்டு கிளை மேலாளரிடம் அனுமதி பெற்று, வால்பாறை அரசு மருத்துவமனைக்கு அ.சா.1 சிகிச்சைக்காக சென்றார் என்று சொன்னால் சரியல்ல. அரசு மருத்துவமனையில் அ.சா.1 புறநோயாளியாக சிகிச்சை பெற்று வால்பாறை காவல் நிலையம் சென்று அ.சா.1 புகார் அளித்ததின் பேரில் போலீசார் என்னை விசாரித்தார்கள் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது, எதிரிகளுக்கு பயந்து எதிரிகளுக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பிறழ்சாட்சியாக மாறி சாட்சியமளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:** இல்லை

**மறு விசாரணை** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி.N.மீனாட்சி
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**
**CC.No.35/2025**
**2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 10- ம் நாள் செவ்வாய்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 03-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 03 | தொழில் | - | தனியார் வேலை |
| பெயர் | - | மணி | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | முருக்கப்பன் | சமயம் | - | |
| கிராமம் | - | வாழைத்தோட்டம் | வயது | - | 54/2026 |
| சாதி | - | | | | |

**<u>10-03-2026</u>**

**( 1, 2 எதிரிகள் ஆஜர். 3-ம் எதிரி ஆஜரில்லை)**

(3-ம் எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

<u>முதல் விசாரணை:</u>

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து தனியார் அடகு கடையில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ராஜேஸ்பிரபு என்பவரை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியாது. அ.சா.1-க்கும், எதிரிகளுக்கும் இடையே என்ன சம்பவம் நடந்தது என்று தெரியாது. நான் எந்த சம்பவமும் பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>

1. கடந்த 09.06.2025-ம் தேதி நான் இரவு 08.45 மணியளவில் கடையில் பணியில் இருந்த போது, அ.சா.1 அரசு பேருந்தை டிப்போவிற்குள் செலுத்திய போது, ஆஜர் எதிரிகள் மூவரும் ஒரு இருசக்கர வாகனத்தில் வேகமாக வந்து பேருந்து முன் குறுக்காட்டி நிறுத்தினார்கள் என்று சொன்னால் சரியல்ல. அ.சா.1 அப்போது, பேருந்தை நிறுத்திவிட்டு கீழே இறங்கி எதிரிகளிடம் ஏன் இப்படி வேகமாக வந்து நிறுத்துறீங்க என்று கேட்ட போது, எதிரிகள் மூவரும் அ.சா.1-ஐ பார்த்து தகாத வார்த்தைகளால் திட்டி, சஞ்சய் என்பவர் கையால் அ.சா.1-ன் வாயில் குத்தினார். கண்ணன் என்பவர் கையால் அ.சா.1-ன் முதுகில் அடித்தார் என்று சொன்னால் சரியல்ல. சிவசக்தி என்பவர் அ.சா.1-ன் இடுப்பு பகுதியில் எட்டி உதைத்தார் என்று சொன்னால் சரியல்ல. அ.சா.1 நிலைதடுமாறி கீழே விழுந்த போது, நானும், அ.சா.2-ம் எதிரிகளை பார்த்து சத்தம் போடவே சஞ்சய்

கீழே கிடந்த கல்லை எடுத்து கொலை மிரட்டல் விடுத்து கல்லை அங்கே கீழே போட்டுவிட்டு எதிரிகள் மூவரும் இருசக்கர வாகனத்தில் சென்றுவிட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. பின்னர் அ.சா.2-ம், அ.சா.1-ம் பேருந்தை பணிமனையில் நிறுத்திவிட்டு கிளை மேலாளரிடம் அனுமதி பெற்று, வால்பாறை அரசு மருத்துவமனைக்கு அ.சா.1 சிகிச்சைக்காக சென்றார் என்று சொன்னால் சரியல்ல. அரசு மருத்துவமனையில் அ.சா.1 புறநோயாளியாக சிகிச்சை பெற்று வால்பாறை காவல் நிலையம் சென்று அ.சா.1 புகார் அளித்ததின் பேரில் போலீசார் என்னை விசாரித்தார்கள் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது, எதிரிகளுக்கு பயந்து எதிரிகளுக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பிறழ்சாட்சியாக மாறி சாட்சியமளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>** இல்லை

**<u>மறு விசாரணை</u>** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி.N.மீனாட்சி
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**
**CC.No.35/2025**
**2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 10- ம் நாள் செவ்வாய்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.04 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 04 | தொழில் | - | பைக் மெக்கானிக் |
| பெயர் | - | சாகுல்அமித் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | யூசூப் | சமயம் | - | |
| கிராமம் | - | ஈட்டியார் எஸ்டேர் | வயது | - | 40/2026 |
| சாதி | - | | | | |

**<u>10-03-2026</u>**

**( 1, 2 எதிரிகள் ஆஜர். 3-ம் எதிரி ஆஜரில்லை)**

(3-ம் எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து பைக் மெக்கானிக் வேலை செய்து வருகிறேன். அ.சா.1-ஐ தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள 1-வது சாட்சி கையொப்பம் என்னுடையது. சென்ற வருடம் 10-ம் தேதி மாதம் நினைவில்லை. இரவு நேரத்தில் வால்பாறை காவல் நிலைய போலீசார் நான் வேலை செய்யும் கடை முன்பாக படம் வரைந்தார்கள். கடைக்கு எதிரே பிரச்சனை நடந்து சென்றதாக விசாரித்துக்கொண்டிருந்தார்கள். என்னை சாட்சியாக கையொப்பம் செய்ய சொன்னார்கள். நான் கையொப்பம் செய்தேன். **அந்த பார்வை மகஜரிலுள்ள 1-வது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2-ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள 1-வது சாட்சி கையொப்பம் என்னுடையது. **அந்த கைப்பற்றுதல் மகஜரிலுள்ள 1-வது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3-ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி கையொப்பத்தை எதற்காக கையொப்பம் செய்தேன் என்று தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

1. கடந்த 10.06.2025-ம் தேதி காலை 11.15 மணிக்கு வால்பாறை காவல் நிலைய உதவி ஆய்வாளர் குற்ற எண் 63/2025 வழக்கு தொடர்பாக நான் பணிபுரியும் இருசக்கர வாகனம் பழுது

நீக்கும் கடை முன்பாக விசாரித்துக்கொண்டிருந்த போது, நானும், கிருஷ்ணன் என்பவரும் அங்கு நின்று கொண்டிருந்தோம் என்று சொன்னால் சரியல்ல. பின்னர் போலீசார் எங்கள் முன்பாக சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. பின்னர் 12.30 மணிக்கு போலீசார் எங்கள் முன்பாக சம்பவயிடத்திலிருந்து கைக்கு அடக்கமான கல் ஒன்றை மகஜரில் கைப்பற்றினார்கள் என்று சொன்னால் சரியல்ல. பின்னர் நானும், கிருஷ்ணன் என்பவரும் பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் ஆகியவற்றில் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது, எதிரிகளுக்கு பயந்து எதிரிகளுக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பிறழ்சாட்சியாக மாறி சாட்சியமளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:** இல்லை

**மறு விசாரணை** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி.N.மீனாட்சி
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.